**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO. 23/2022**

**PW. 2**

**Date: 14.10.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.முனுசாமி (கி.உ ஓய்வு) | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | நாகப்பன் | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| வட்டம் | | வயது | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **14th October 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர் இல்லை. 3 முதல் 5 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. நான் கடந்த **31/01/2024** அன்று வளவந்தாங்கல் கிராம உதவியாளராக வேலை பார்த்து ஓய்வு பெற்றேன். ஆஜர் **3** முதல் **5** எதிரிகள் பஞ்சதிருத்தியை சேர்ந்தவர்கள் எனக்கு தெரியும். **1** மற்றும் **2** எதிரிகளும் எனக்கு தெரியும். அ.சா.**1** பஞ்சதிருதிதிய்ல கிராம உதவியாளராக பணிபுரிகிறார். இந்த சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. நான் சம்பவம் சம்பந்தாமக கேள்விபடவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரலிருந்தும் குறுக்கு விசாரணை இல்லை

S/d- K.Nilavarasan, 14.10.2025
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO. 23/2022**

**PW. 1**

**Date: 14.10.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.சங்கரன் (கி.உ) | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | பார்த்தசாரதி | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| வட்டம் | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **14th October 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர் இல்லை. 3 முதல் 5 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. நான் கிராம உதவியாளராக வேலை செய்து வருகிறேன். சாட்சி தமிழரசன் சம்பவ காலத்தில் வருவாய் அலுவலராக பணியாற்றி வந்தார். ஆஜர் **3** முதல் **5** எதிரிகளையும் எனக்கு தெரியும். **1** மற்றும் **2** எதிரிகளும் எனக்கு தெரியும். நான் பணிபுரியும் பஞ்சதிருத்தியில் வசித்து வருகிறார்கள். கடந்த **12/08/2018** அன்று காலை **11.00** மணியளவில் ஜீவா நகருக்கு வருவாய் ஆய்வாளர் தமிழரசன் கிராம நிர்வாக அலுவலர் தமிழ்செல்வன் கிராம உதவியாளர் சாட்சி முனுசாமி ஆகியோர் வாக்காளர் சரிபார்க்கும் பணிக்காக சென்றோம்.**1** ஆம் எதிரி ஏன் அங்கு கணக்கு எடுக்க வந்தீர்கள்

என்று கையால் என்னை தாக்கினார்.

2. அதனால் நான் மயங்கி விழுந்துவிட்டேன். அது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். எதிரி ஏன் அவ்வாறு நடந்து கொண்டார் என்று எனக்கு தெரியவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (புகார்) உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் நான் கொடுத்தது தான். (10/12/2018 தேதியிட்ட புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது) போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

3. 1 ஆம் எதிரி எனக்கு நன்கு தெரிந்தவர் என்றாலும் அவர் அரசியல் கட்சியில் பொறுப்பில் உள்ளார் என்றால் சரிதான். 1 ஆம் எதிரி பொது பிரச்சனை சம்பந்தமாக பல போராட்டங்கள் செய்துள்ளார் என்றாலும் அந்த விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். எனவே பொது பிரச்சனைகளுக்காக போராடும் 1 ஆம் எதிரி என்னை தாக்க வேண்டிய எந்த தேவையும் இல்லை என்றால் சரிதான். 1 ஆம்எதிரி பொது பிரச்சனைகளுக்காக போராட்டம் செய்து வருவதால் எங்கள் உயர் அதிகாரிகள் எனக்கு கொடுத்த அழுத்ததின் காரணமாக எதிரிகளின் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பொய் வழக்கு என்றாலும் எதிரிகளை விடுதலை செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல. நான் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

S/d- K.Nilavarasan, 14.10.2025
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.